மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.03/2021
அசல் வழக்கு எண்.244/2014

சேகர் ... மனுதாரர்/1ம்பிரதிவாதி

/எதிராக/

மாணிக்கம் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 12.11.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கே.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.வினோத் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

மனுதாரர்/1ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் தாவாசொத்து ச.எண்.200/3ல் 15.09.2003ம் தேதியில் 1ம்பிரதிவாதியும், மற்ற நபர்களும் சேர்ந்து பாதை பாத்திய ஒப்பந்த பத்திரத்தை பதிவு செய்து அதில் 15 அடி அகலத்தில் பாதை அமைத்துள்ளோம் என கூறியுள்ளார். ஆனால் எதிர்மனுதாரர்/வாதி பிரமாணப் பத்திரிக்கையில் பிரதிவாதிகள் ரோடு போட முயற்சித்தனர் என மட்டும் கூறியுள்ளார். ஆகவே தாவா சொத்தில் வாதி சொல்வதுபோல் பாதை இல்லையா, உள்ளதா என்பதை பற்றி நிரூபிக்க மனுதாரர்/1ம்பிரதிவாதி கடமைப்பட்டுள்ளார். எனவே நீதிமன்ற ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நிலஅளவையாளர் உதவியுடன் தாவா சொத்தை அளவுசெய்து அத்து காட்டி வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரர்/1ம்பிரதிவாதி மனுதாக்கல் செய்துள்ளார்.

2) எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:

(i) இம்மனுவினை 1ம்பிரதிவாதி மட்டுமே தாக்கல் செய்துள்ளார். மற்ற பிரதிவாதிகளின் நிலை என்ன என்பது குறித்து மனுதாரர் வாதுரைக்கவில்லை. 2, 3 பிரதிவாதிகளை இம்மனுவில் சேர்க்கவில்லை. எனவே மனு முழுமையாக நிறைவடையாத மனு என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கதாகும். மனுதாரர்/1ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் தாவாசொத்து ச.எண்.200/3ல் 15.09.2003ம் தேதியிட்ட ஒப்பந்த பத்திரத்தில் 15 அடி அகலத்தில் பாதை அமைத்துள்ளதாக கூறுவது பொய். அதில் எதிர்மனுதாரர் தரப்பினரில்லை என்பதால் எந்தவகையிலும் கட்டுப்படுத்தாது.

(ii) வாதி பிரமாணப் பத்திரிக்கையில் பிரதிவாதிகள் ரோடு போட முயற்சித்தனர் என கூறுவது பொய்யாகும். வாதி தாவா சொத்தில் புதிதாக பாதை போடக்கூடாது என பரிகாரம் கோரியுள்ளார். உண்மையில் எந்த பாதையும் இல்லை. பாதை இருந்திருந்தால் வாதி அதற்காக தனியாக தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். வா.சா.1யை இரண்டுமுறை குறுக்குவிசாரணை செய்துவிட்டு 7 ஆண்டுகள் கழித்து மனுதாக்கல் செய்துள்ளார். மேலும் சாட்சியங்களை திரட்டவும் மனுதாக்கல் செய்துள்ளார். நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்குகளில் சுவாதீனத்தை நிரூபிக்க ஆணையாளரைநியமிக்க முடியாது. இவ்வழக்கை காலதாமதப்படுத்த மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் எதிர்மனுதாரர்/வாதி கோரியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின் போது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்/1ம்பிரதிவாதி தரப்பில் மனுதாரர்/1ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் தாவாசொத்து ச.எண்.200/3ல் 15.09.2003ம் தேதியில் 1ம்பிரதிவாதியும், மற்ற நபர்களும் சேர்ந்து பாதை பாத்திய ஒப்பந்த பத்திரத்தை பதிவு செய்து அதில் 15

அடி அகலத்தில் பாதை அமைத்துள்ளோம் என கூறியுள்ளார் எனவும், ஆனால் எதிர்மனுதாரர்/வாதி பிரமாணப் பத்திரிக்கையில் பிரதிவாதிகள் ரோடு போட முயற்சித்தனர் என மட்டும் கூறியுள்ளார் எனவும், ஆகவே தாவா சொத்தில் வாதி சொல்வதுபோல் பாதை இல்லையா, உள்ளதா என்பதை பற்றி நிரூபிக்க மனுதாரர்/1ம்பிரதிவாதி கடமைப்பட்டுள்ளார் எனவும், எனவே நீதிமன்ற ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நிலஅளவையாளர் உதவியுடன் தாவா சொத்தை அளவுசெய்து அத்து காட்டி வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரர்/1ம்பிரதிவாதி மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவினை 1ம்பிரதிவாதி மட்டுமே தாக்கல் செய்துள்ளார் எனவும், மற்ற பிரதிவாதிகளின் நிலை என்ன என்பது குறித்து மனுதாரர் வாதுரைக்கவில்லை எனவும், 2, 3 பிரதிவாதிகளை இம்மனுவில் சேர்க்கவில்லை. எனவே முழுமையாக நிறைவடையாத மனு என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கது எனவும், மனுதாரர்/1ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் தாவாசொத்து ச.எண்.200/3ல் 15.09.2003ம் தேதியிட்ட ஒப்பந்த பத்திரத்தில் 15 அடி அகலத்தில் பாதை அமைத்துள்ளதாக கூறுவது பொய் எனவும், அதில் எதிர்மனுதாரர் தரப்பினரில்லை என்பதால் எந்தவகையிலும் கட்டுப்படுத்தாது எனவும், வாதி பிரமாணப் பத்திரிக்கையில் பிரதிவாதிகள் ரோடு போட முயற்சித்தனர் என கூறுவது பொய் எனவும், வாதி தாவா சொத்தில் புதிதாக பாதை போடக்கூடாது என பரிகாரம் கோரியுள்ளார் எனவும், உண்மையில் எந்த பாதையும் இல்லை எனவும், பாதை இருந்திருந்தால் வாதி அதற்காக தனியாக தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் எனவும், வா.சா.1யை இரண்டுமுறை குறுக்குவிசாரணை செய்துவிட்டு 7 ஆண்டுகள் கழித்து மனுதாக்கல் செய்துள்ளார் எனவும், மேலும் சாட்சியங்களை திரட்டவும் மனுதாக்கல் செய்துள்ளார். நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்குகளில் சுவாதீனத்தை நிரூபிக்க ஆணையாளரை நியமிக்க முடியாது எனவும், இவ்வழக்கை காலதாமதப்படுத்த மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார் எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் எதிர்மனுதாரர்/வாதி கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கில் 3 பிரதிவாதிகள் இருந்தாலும் ஒரு பிரதிவாதி நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க மனுதாக்கல் செய்யலாம் என்பதால் அனைவரும் மனுதாக்கல் செய்யாததால் மனு நிலைக்கத்தக்கதல்ல என முன்னிலைப்படுத்திய கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(iv) மனுதாரர் 7 ஆண்டுகளாக மனுதாக்கல் செய்யவில்லை என எதிர்மனுதாரர் கூறியுள்ளபோதும் இவ்வழக்கானது கடந்த 24.09.2019 ல் விசாரணைக்கு வந்தபோது எதிர்மனுதாரர்/வாதி வழக்கை நடத்தாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.அதன்பின்னர் எதிர்மனுதாரர்/வாதி வழக்கை கோப்பிற்கு எடுக்க இ.ம.எண்.01/2019 தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் வழக்கானது கடந்த 11.02.2020 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே வழக்கு ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் கூறுவதுபோல் 7 ஆண்டுகளாக மனுதாக்கல் செய்யவில்லை என முன்னிலைப்படுத்திய கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் இவ்வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் வழக்கு சொத்தில் அத்துமீறி ரோடு போடக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் மனுதாரர்/1 ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் ஏற்கனவே பாதை உள்ளது என கட்சி செய்துள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் வா.சா.1 யை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது கூட வழக்கு சொத்தில் பாதை இல்லை என எதிர்மனுதாரர்/வா.சா.1 மறுத்துள்ளது தெரியவருகிறது. மேலும் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க ஆட்சேபணை இல்லை எனவும் சாட்சியமளித்துள்ளார். எனவே இவ்வழக்கில் வழக்கு சொத்தில் பாதை உள்ளதா, இல்லையா என்பது குறித்து நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்யும் அறிக்கையானது இவ்வழக்கினை தீர்மானிக்க உதவும் என்பதாலும், அது சாட்சிகளை சேகரிப்பதற்காக என கூறமுடியாது என்பதாலும், எதிர்மனுதாரர்/வா.சா.1 குறுக்குவிசாரணையில் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க ஆட்சேபணை இல்லை என சாட்சியமளித்துவிட்டு தற்போது நியமிக்க கூடாது என கட்சி செய்ய முரண்தடை செய்யப்பட்டுள்ளார் என்பதாலும், எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்திய அனைத்து கட்சிகளும் ஏற்புடையதல்ல என முடிவு செய்து இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக திரு.என்.செந்தில்குமார் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் வழக்கு சொத்தை பார்வையிட்டு வழக்கு சொத்தில் பாதை உள்ளதா இல்லையா என்பது குறித்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் பிர்க்கா சர்வேயருடன் இருதரப்பு ஆவணங்களின் மூலம் அளந்தும், ஆக்கிரமிப்பு இருந்தால் அதன் அளவுகள் குறித்து அறிக்கையும், தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.5000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர் நேரடியாக செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு வழக்கு சொத்தினை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க.06.12.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,<br>மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,<br>மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>மேட்டூர்.